**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 109/2020 |
| Name | : | Shri Ramachandran |
| P.W. | : | 7 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**09.03.2026**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது சேலம் மாநகர காவல் உதவி ஆணையராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.07.2019ம் தேதி தளி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது கூடுதல் பொறுப்பாக மடத்துக்குளம் காவல் நிலைய வட்ட ஆய்ளவராக பணிபுரிந்தேன் அன்றைய தினம் கணியூர் காவல் நிலைய குற்ற எண் 140/2019 இதச பிரிவுகள் 279, 304(A) ன் படியான வழக்கை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கௌதம்ராஜ் மற்றும் உதயபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சம்பவ இடம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 14.30 மணிக்கு உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்து போன நபரின் பிரரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்து சாட்சிகளின் வாக்குமூலம் பதிவு செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் TN 10 AD 9996 கார் மற்றும் TN 41 Y 7116 XL Super இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்கு அனுப்பி

வைத்தேன். வழக்கின் எதிரி குமரேசனை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். மடத்துக்குளம் காவல் ஆய்வாளர் விடுப்பிற்கு பின் பணிக்கு திரும்பியதால் வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக அவர் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 தனது புகாரில் நானும், எனது உறவினர் பசுபதிராஜும் நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எந்த இடத்தில் நின்று பேசிக்கொண்டிருந்ததாக குறிப்பிட்டு புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி தனது வாகனத்தை சரியான திசையில் தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். எதிரி ஓட்டி வந்ததாக சொல்லும் வாகனத்தின் காப்புச் சான்று மற்றும் உரிமைச் சான்று சரியாக இருந்ததா என்றால் வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பும் போது நான் அதை பரிசீலிக்கவில்லை வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அதிகாரி அதை பார்வையிட்டிருப்பார். அந்த சமயத்தில் எதிரிக்கும் நான்கு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். விபத்தில் இறந்து போன நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், அவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் அதை நான் பரிசீலிக்கவில்லை வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அதிகாரி அதை பார்வையிட்டிருப்பார். வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.03.09 12:47:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்